A Cipla INITIATIVE

breathefree

# டஃபீஸ்

போலாம் போ டண் ட டா!!!

இந்திய குழந்தை மருத்துவர்களுடன் இணைந்து உருவாக்கப்பட்டது

## மறையும் கோப்பை விவகாரம்!

### புதிர் எண். 3




குறிப்பு: ஒரு கற்பனையான விஷயத்தை வைத்து இந்தக் கதை சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்படும் கதாபாத்திரங்களும் விவரங்களும் கற்பனையானவை என்பதுடன் விளக்குவதற்கான நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன, உண்மையான நோயாளி அல்ல.

# ட**ஃ**பீஸை சந்திக்கலாம்

ட**ஃ**பீஸ் முன்னெடுப்பு என்பது குழந்தைகளின் சிறந்த சுவாச பராமரிப்பை மேம்படுத்துவதற்கானது. ஆஸ்துமா போன்ற நாள்பட்ட சுவாச நோயுடன் வாழும் குழந்தைகளின் தாக்கத்தால், அவர்களுடைய நிலையை மேம்படுத்தி, அவ்வாறு செய்வதற்கு அவர்களுடைய பெற்றோருக்குத் திறனளிக்க உதவுவதற்காகவே, ஆஸ்துமாவானது குழந்தைகளை தங்களுடைய முழுத் திறனிலிருந்து.

பின்வாங்கச் செய்யாத ஒரு உலகத்தை உருவாக்க ட**ஃ**பிஸ் பொறுப்பேற்றுள்ளது!



## விக்கி

இதுதான் விக்கி, ஆஸ்துமாவுடன் வாழும் 8 வயது பையன், பெரும் கற்பனையும் துப்பறியும் நாவல்களில் தீராத ஆர்வமும் கொண்டவன்! விலாஸ்பூரில் வசிக்கும் இவன் உலகின் சிறந்த துப்பறிவாளனாக, தனக்கு மிகவும் பிடித்த ஜேசூஸ் தலாஷ் போன்று ஆக வேண்டும் என விரும்புகிறான். ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது - அவன் சோர்வடைந்து மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தால் அல்லது ஆஸ்துமா தாக்குதல் ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்பட்டால், வழக்குகளைத் தீர்ப்பதில் அவன் கவனம் செலுத்துவது கஷ்டமாகிவிடும். அதிர்ஷ்டவசமாக, அவனுடைய தோழர்கள் மற்றும் துணைவனான மிஸ்டர்.ப**ஃ**பியின் உதவியுடன் ‘வலுவாக’ இருப்பதையும், சரியான பாதையில் செல்வதையும் அறிந்திருந்தான்!



## மினி

இதுதான் மினி, விக்கியின் அற்புதமான 5 வயது தங்கை! அவள் அறிவுக்கூர்மையானவள், விவேகமானவள் என்பதுடன் புதிர்களை விடுவிப்பதில் எப்போதுமே தன்னுடைய அண்ணனுக்கு உதவுவதில் ஆர்வம் கொண்டவள். வயதில் சிறியவளானாலும் துணிச்சலானவள், விக்கியை கவரக்கூடிய அளவுக்கு பயமற்றவள் உறுதியானவள். இருவரும் சேர்ந்துவிட்டால், வழக்குகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும், எத்தகைய திகிலூட்டும் சாகசங்களாக இருந்தாலும் அவர்களைத் தடுக்கவே முடியாது.



## குல்லு

இவன்தான் குல்லு, விக்கியின் பருத்த, வலுவான, சிலநேரம் அலட்சியமான நண்பன். புதிர்களை விடுவிக்க உதவுவதற்கு விக்கி மற்றும் மினியுடன் இணைந்துகொள்ள அவனுக்கு ரொம்பவே பிடிக்கும். சிலநேரங்களில், அவனுடைய அலட்சியங்கள் அவர்களை பிரச்சனைக்கு உள்ளாக்கும், ஆனால் அவனுடைய வலிமை அவர்களைக் காப்பாற்றிவிடும்.



## மிஸ்டர்.பஃபி

இவர்தான் மிஸ்டர்.பஃபி, விக்கியின் நம்பிக்கைக்குரிய தோழன். பாக்கெட் சைஸில் இருக்கும் இந்த பவர்ஹவுஸ் எப்போதுமே விக்கியின் பக்கம்தான், அவனுக்கு வேண்டிய நம்பிக்கையை கொடுத்து, எந்தச் சவாலையும் எதிர்கொள்ள அவனை உற்சாகப்படுத்துபவன். தன்னுடைய குழுவில் மிஸ்டர்.பஃபி இருக்கும் வரையில், விக்கி டண்-ட-டா வாழ்க்கையை வாழ்வதற்கு எந்தத் தடையும் இல்லை.




ட**ஃ**பீஸ் இ-காமிக் புத்தகத்தை டவுன்லோடு செய்ய


மேலும் தகவல்களுக்கு, பார்க்கவும்:
www.breathefree.com/tuffies

# மறையும் கோப்பை விவகாரம்!




என்னாச்சு அர்ஜுன்?
எதை காணோம்?
பந்தய கோப்பையை கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு நான்தான் பொறுப்பு.
ஜிம் டீச்சருக்குத் தெரிந்தால் என்னுடைய கேப்டன் பதவியே போய்விடும்!
கவலை வேண்டாம், அர்ஜுன். நாங்கள் கண்டுபிடிக்க உதவுகிறோம்.
நிச்சயமாக! அந்தப் பளபளக்கும் கோப்பை இல்லாமல் பந்தயம் நிறைவடையாது.
இதை 'மறைந்துபோகும் கோப்பை வழக்கு' என்று அழைப்போம்.
விக்கி இங்கே இருக்கும்போது என்ன பயம்!
பள்ளி மைதானத்தில்.
எந்தத் தடயங்களும் இல்லாமல் கோப்பையை எப்படி அண்ணா தேடுவது?
நாம் சிசிடிவி காட்சியை பார்ப்போம், அங்கு ஏதாவது கிடைக்கலாம்.
போலாம் போ டண்-ட-டா!


பள்ளியின் சிசிடிவி கண்காணிப்பு அறை.
இதோ பார்! எல்லோரும் பிரார்த்தனை பாடல் பாடும்போது, பச்சை ஜாக்கெட்டும் ஊதா தொப்பியும் போட்டிருக்கும் அந்தப் பையன் கோப்பையுடன் நழுவிச் செல்கிறான்!
ம்ம்ம்... இந்த ஊதா தொப்பி தெரிந்தவன்போல் இருக்கிறதே.
அவன் எப்போதும் இந்த ஊதா தொப்பி போட்டிருப்பதை பார்த்திருக்கிறேன்.
அது ராஜ்தான், விக்கி.
சந்தேகமில்லாமல் ராஜ்தான் அண்ணா. கோப்பை மீது அவனுக்கு பேராசை!
மினியும் குல்லுவும் போன பிறகு சிசிடிவியை விக்கி மீண்டும் பார்க்கிறான்.
ம்ம்ம்... ஏதோ ஒன்று சரியில்லையே.
பள்ளிக்கூட மைதானத்தில்.
இதோ வந்துட்டான் புஸ்..புஸ். இவன் ஓடுவானாளன்றே தெரியவில்லை!
வேடிக்கை பார், அவன் உன்னை பந்தயத்தில் ஜெயிப்பான்.
நல்லது! உனக்காக உன் தங்கையே போராடட்டும்.
உனக்கு இன்ஹேலர் எப்போதுமே இருக்கனுமா?
நான் உறிஞ்சினால் வேகமாக ஓடி ராஜை ஜெயிக்க முடியுமா?
இல்லை, இது அப்படி கிடையாது. இது வேகமாக ஓடுவதற்கு அல்ல.
திடீர் மூச்சடைப்பை தடுத்து ஆஸ்துமாவை சமாளிக்க என்னுடைய மருத்துவர் கொடுத்தது.


பந்தயத்திற்கு ஒருமணி நேரம் முன்பு.
எனக்கு சோர்வாவும் பசியாவும் இருக்கு விக்கி. இன்னமும் நாம கோப்பையை கண்டுபிடிக்கவில்லை.
கிர்ர்ர்
ஆமாம் அண்ணா, ஒரு மணி நேரத்தில் பந்தயம் தொடங்கிவிடும்.
நாம் என்ன செய்வது?
ஐடியா!
நாம ராஜோட லாக்கரை செக் பண்ணனும்.
நீங்க ரெண்டு பேரும் லாக்கர் ரூமுக்குப் போங்க. கொஞ்ச நேரத்தில் நானும் வந்துவிடுகிறேன்.
அப்போதுதான்...
புது வழக்கு. எப்படி போகிறது?
பூஃப்!
ராஜ் ஒரு இம்சைதான், ஆனால் தன்னுடைய இமேஜை காப்பாற்றிக்கொள்ள விரும்புகிறவன்.
அவன் ஒரு ஸ்டார் வீரன், எப்போதும் ஜெயிப்பவன். அதனால், அவன் ஏன் கோப்பையை திருட வேண்டும்? இதில் எதையோ நான் தவறவிடுகிறேன்.
அமைதியாக இரு, தெளிவாகத் தெரியும்போது உறுதிப்படுத்து.
நம்முடைய மந்திரம் தெரியும்தானே?
மூச்சை இழுத்து பத்து வரை எண்ண வேண்டும், மூச்சை வெளியே விட்டு சந்தேகத்தை துறக்க வேண்டும்.


ஆமாம்! புரிந்தது. அவ்வளவுதான்.
லாக்கர் ரூமில்.
ராஜ், இது உன்னோட லாக்கரில் இருந்தது.
கோப்பையை ஏன் திருடினாய்!
அவனை பிரின்சிபல் ஆபிசிற்கு கூட்டிச் செல்வோம். அவனை சஸ்பெண்ட் செய்ய வேண்டும்.
என்னது? நான் ஏன் திருடப் போகிறேன்?
அதை நான்தானே வெல்லப் போகிறேன்.
வெயிட்! உன்னுடைய ஊதா தொப்பியும் பச்சை ஜாக்கெட்டும் எங்கே?
பயிற்சியின்போது சில நாட்களுக்கு முன்பு தொலைத்துவிட்டேன்.
என்னிடம் பச்சை ஜாக்கெட் கிடையாது. எனக்கு பச்சை நிறமே பிடிக்காது.
ஆஹ்ஹஹ்ஹ!
சமீர், உன்னிடம்தானே பச்சை ஜாக்கெட் இருக்கிறது?


நீங்...க...என்னை குற்றம் சாட்ட முயற்சிக்கிறீர்களா.
வி..வி..விக்கி, உன்னை யார் துப்பறியச் சொன்னது?
சமீர், உனக்கு பிரச்சனை இல்லாவிட்டால் உன்னோட லாக்கரை திறக்க முடியுமா?
என்ன? என்னோட லாக்கரையா?
அதில் என்னுடையது எதுவுமே இல்லை.
அவர்கள் அவனுடைய லாக்கரைத் திறந்து அவனுடைய புத்தகங்கள் மற்றும் பையுடன் பச்சை ஜாக்கெட்டை கண்டுபிடித்தனர்.
சமீர், அது நீதான்!!!!!!
நான் சிசிடிவியை மறுபடியும் பார்த்தேன்; காலை நேர பிரேயரில் நீ இல்லை. அப்போதும் எனக்கு சந்தேகம் வந்தது.
ராஜும் மற்ற எல்லோரும் இருந்தனர், கோப்பையை எடுத்தவன் பார்ப்பதற்கு சமீரை போலவே இருந்தான்.
பிளாஷ்பேக்!
நேற்று நடந்தவற்றால் நான் மனமுடைந்து போயிருந்தேன்.
எல்லோரையும் துன்புறுத்தும் ராஜ் தண்டிக்கப்பட வேண்டியவன்.
சமீர், திருடிய குற்றத்தை என் மீது வைக்கிறாயா?
மினி, நான்தான் கோப்பையை எடுத்தேன் என்று எப்படி நினைத்தாய்?



என்னை... மன்னிச்சிடு ராஜ்.
சமீர், நீ சொன்னது சரிதான், ஆனால் நீ செய்ததும் பெரிய தவறு.
ராஜ் வெட்கிப்போனான்.
இந்தமுறை தப்பிவிட்டாய் ராஜ்,
அடுத்தமுறை யாரையாவது துன்புறுத்த நினைத்தால் நானே உன்னை பிரின்சிபால் ஆபீசிற்கு கூட்டிப்போவேன்.
என்னை மன்னித்துவிடு ராஜ், எல்லோரும்தான். நான் கோப்பையை திருட விரும்பவேயில்லை.
என்னை மன்னித்துவிடு. என் தவறை உணர்ந்துவிட்டேன்.
பரவாயில்லை ராஜ், சமீர் நாம் எல்லோருமே நண்பர்கள்தானே.
எல்லாரும் பாருங்க! பந்தயத்தை விட்டுட்டீங்களா?
யார் ஜெயிக்கிறார் என்று பார்ப்போம்!!
வழக்கு முடிந்தது!


ஓட்டப்பந்தய போட்டியில்.
ராஜை சமீர் தோற்கடித்து கோப்பையை கைப்பற்றினான்.
FINISH
ஹுர்ரே!
சமீர், ராஜுக்கு நீ பாடம் கற்றுத் தந்துவிட்டாய் என்று நினைக்கிறேன்.
இதுதான் சரியான வழி; நீ அப்படிச் செய்தது தவறானது.
ஆமாம் விக்கி, நீ சொல்வது சரிதான்!
நான் பந்தயத்தில் தோற்றுவிட்டேன்.
பின்னர்...
நன்றாகச் செய்தாய் விக்கி! வழக்கை தீர்த்துவைத்து நிஜமாகவே கோப்பையை திருடியவனை தெரிய வைத்துவிட்டாய்! அத்துடன் பந்தயத்திலும் ஓடியிருக்கிறாய்! இதற்கு மேல் உன்னைப் பற்றி பெருமைப்பட எதுவுமில்லை!
தேங்ஸ், பஃபி! டாக்டரின் அறிவுரைப்படி நான் தொடர்ந்து இன்ஹேலரை பயன்படுத்தியதுதான் இதற்குக் காரணம்.
புதிர்களைத் தீர்ப்பது நல்ல விஷயம்தான், இன்னும் நல்ல விஷயம் எதுவென்று தெரியுமா? மற்றவர்களிடம் நல்லபடியாக நடந்துகொள்வது. நட்புதான் உண்மையான கோப்பை, அது எந்தப் பந்தயத்தையும் புதிரையும்விட சிறந்தது. நாம் அனைவருமே பரிவுணர்ச்சியுள்ள வெற்றியாளர்கள்தான்.
முற்றும்.

A Cipla INITIATIVE

breathe free

# TUFFIES

LET'S GO DHAN-TA-DAA!!!

## Calling all Super Parents!

Has your young champion conquered challenges with their unbeatable spirit?

**Get ready to inspire the world!**

Share your child's heroic tale of bravery and victory! Their story could be the lucky one to get featured in the Tuffies comic book, revealing how amazing heroes truly are!

### All you have to do is:

- Scan the QR code to register
- Fill in all the details
- Write your kid's story
- Accept the consent form

Join us in celebrating the unbeatable spirits of youngsters - Because every challenge they overcome adds a thrilling chapter to their incredible journey!

For further information on how to manage asthma and to know more about Tuffies, visit https://www.breathefree.com/tuffies/

breathefreeworld Breathefree @breathefreetv





DISCLAIMER: The content has been developed and designed by (I-realities Technology Private Limited) for Cipla Ltd. This information is for the purpose of awareness only, not intended nor implied to be a substitute for professional medical advice, diagnosis, or treatment. Please consult your doctor/ healthcare professional before starting any treatment/medicine/ inhaler. The CIPLA mark and logo are the sole intellectual property of Cipla Limited.

Note: The story depicted is based on hypothetical cases. Characters and details represented here is purely fictional and is for illustrative purposes only. Not for Actual patients. Do consult your doctor for more information regarding your condition.

SCAN QR CODE TO DOWNLOAD TUFFIES E-COMIC BOOK

# Cipla

# HELPING INDIA BREATHEFREE*




**Do consult your doctor for more information regarding your condition**

Disclaimer: The content in this booklet has been developed and designed by (I-realities Technology Private Limited) for Cipla Ltd. Information in this literature is for the purpose of awareness only, not intended nor implied to be a substitute for professional medical advice, diagnosis, or treatment. Please consult your doctor/ healthcare professional before starting any treatment/medicine/ inhaler. Cipla makes every effort to provide information that is accurate and timely but makes no guarantee in this regard. Although great care has been taken in compiling and checking the information, the authors, agency, and its associates or agents, and sponsors shall not be responsible, or in any way liable for any errors, omissions or inaccuracies in this publication whether arising from negligence or otherwise, however, or for any consequences arising therefrom. No part of this may be reproduced, transmitted, or stored in any form or by any means either mechanically or electronically without prior permission. The CIPLA mark and logo are the sole intellectual property of Cipla Limited.

*Cipla helps patients with respiratory conditions breathe free by equipping them with a range of therapeutic solutions like inhalers, spacers, nebulizers, nasal sprays, and syrups.

SCAN TO LEARN
THE CORRECT INHALER TECHNIQUE WITH
breathe free Digital Educator